## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(20.08.2022 முதல் 24.08.2022)

**அறிக்கை எண்: 66/2022** **தேதி: 19.08.2022**

### திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 °செ முதல் 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும் பதிவானது.

### திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (20.08.2022 முதல் 24.08.2022)

| கடந்த வார வானிலை (16.08.2022 முதல் 18.08.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (20.08.2022 முதல் 24.08.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 16/08 | நாள்-2 17/08 | நாள்-3 18/08 | தேதி | நாள்-1 20/08 | நாள்-2 21/08 | நாள்-3 22/08 | நாள்-4 23/08 | நாள்-5 24/08 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 14 | 6 | 3 | 0 | 7 |
| 37 | 35 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 35 | 36 | 37 | 37 |
| 27 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 26 | 26 | 26 |
| 6 | 5 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 6 | 6 | 6 | 8 |
| 70-63 | 72-67 | 78-67 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-40 | 80-60 | 70-60 | 70-40 | 70-40 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 12 | 10 | 10 | 10 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 20.08.2022, 21.08.2022, 22.08.2022 மற்றும் 24.08.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 °செ முதல் 37 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10-12 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| | | |
|---|---|---|
| நெல் | | வரும் நாட்களில் லேசானது முதல் மிதமானது மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும் |
| நெல் | அறுவடை | எதிர் வரும் நாட்களில் லேசானது முதல் மிதமானது மழை எதிர்பார்க்கப்படுவதால் மழைக்கு முன்பாக அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்யவும். |
| நெல் | நாற்றாங்கால் | தற்போது சம்பா நடவுவிற்க்கு தயாராக இருக்கும் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும். |
| நெல் | நடவு வயல் | வரும் நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் நடவு வயலை தயார் செய்யவும் |
| வாழை | | வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | ஆடு, மாடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

சம்பா நடவுவிற்க்கு தயாராக இருக்கும் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும்.

**இயக்குநர்**